**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்**
**ஒப்படைப் பரீட்சை - 2016**
**மட்டம் - 04**
**வியாபார சட்ட சூழல் - MCU2204**
**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**திகதி: 05.11.2016** **நேரம்: 02.00 பி.ப. – 04.00 பி.ப**

**அறிவுறுத்தல்கள்:** **எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.**
**எல்லா வினாக்களும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.**
**நிகழ்ச்சித் திட்டமிடப்படாத எண் கணிப்பு இயந்திரப் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.**

01. a. "சட்டத்தின் கண்களில் பிரதிபலன் (consideration) பெறுமதிமிக்கதொன்றாக கருதப்படுகின்றது".
Patterson J. in Thomas v Thomas (1842) 2 QB 851

i. மேற்குறிப்பிட்ட கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீர்களா? உங்களின் விடைக்கான காரணங்களைத் தருக. (05 புள்ளிகள்)
ii. மேற்குறிப்பிட்ட கூற்றில் "பிரதிபலனுக்குப்" பதிலாக "நல்லேது" *("Justa Causa")* என்னும் பதம் குறிப்பிடப்பட்டிருந்தால், உங்களின் விடை மாற்றமடையுமா? ஆராய்க. (05 புள்ளிகள்)

b. பின்வருபனவற்றிக்கு விரிவான குறிப்புக்களை எழுதுக.

i. ஒப்பந்தமொன்றை முடிவுறச் செய்தல் (Termination of a contract)
ii. சேதங்களின் சேய்மைகள் (Remoteness of Damages)
iii. சட்டவிரோதமான ஒப்பந்தங்கள் (03 x 05 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

02. a. உள்நாட்டு பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரமொன்றில், சிறி என்பவர் தனது பாவிக்கப்பட்ட சம்சங் கிளாக்ஸி நோட் 7 ஸ்மார்ட் தொலைபேசிகளை ஒவ்வொன்றும் ரூபா. 30,000/= கழிவு விலைக்கு விற்கும் முனைவைக் குறிப்பிட்டுள்ளார். அப் பொருளின் உண்மையான சில்லறை விலை ரூபா. 70,000/= ஆகும். அக்கறையுள்ள எவரேனும் நேரடியாக தொடர்பு கொள்ள அல்லது விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தொலைபேசிக்கு செய்தியனுப்ப அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இதனை ஒரு கொடைமுனையா (offer) அல்லது பேரம் பேசுவதற்கான அழைப்பாவெனக் (invitation to treat) கருதுகின்றீர்களா? உங்களின் விடையை தீர்மானிக்கப்பட்ட வழக்குச் சட்டத்தினை (case law) ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

b. பின்வரும் வழக்குகள் கொண்டுள்ள முக்கியமான ஒப்பந்த கோட்பாடுகளை குறிப்பிட்டு விளக்குக.

i *Carlyll v Carbolic Smoke Ball Company Ltd.* (1892) 2 QB 484
ii. *Tinn v Hoffman* (1873) 29LT 271

(02 x 05 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

3. a. முகவர் (Agent) மீதான முதல்வருக்குரிய (Principal) கடமைகளை ஆராய்க.
(10 புள்ளிகள்)

b. முகராண்மையை (Agency) முடிவுறச் செய்வதற்குள்ள படிமுறைகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

c. பின்வருபனவற்றில் எவையேனும் இரண்டிக்கு (02) சிறு குறிப்புக்கள் எழுதுக.

i. வணிக முகவர் (Mercantile Agent)
ii. தரகர்கள்
iii. ஏல விற்பனையாளர்கள் (02 x 02.5 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

04. a. பங்குடமை மற்றும் கம்பனியொன்றிக்கிடையேயுள்ள கருத்தேற்புக்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
(10 புள்ளிகள்)

b. நிம்னாவும், யசோதாவும் பங்குடமை வியாபார சில்லறைக் கடையொன்றினைத் திறக்க விரும்புகின்றார்கள். ஆயினும் அவர்கள் இருவருக்கும் பங்குடமை வியாபாரத்தைப்பற்றி எதுவும் தெரியாது.
பங்குடமையின் தன்மை, பங்காளர்களுக்கிடையேயுள்ள உறவு, பங்களார்களின் கடமைகள் ஆகியவைகள் அடங்கலான பங்குடமை வியாபாரத்தின் முக்கிய அம்சங்களையிட்டு நிம்னாவிக்கும், யசோதாவிக்கும் அறிவுரை கூறுக. (15 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

05. a. 1927ம் வருட 25ம் இலக்க மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள மாற்றுண்டியலின் அம்சங்களை வரையறுக்குக. (13 புள்ளிகள்)

b. காசோலையொன்றில் குறுக்குக் கோடிடலின் பல்வேறு வகைகள் யாவை? அவைகளை விளக்குக.
(06 புள்ளிகள்)

c. காலக்கிரமத்தில் வைத்திருப்பவர் (Holder in due course) யார்? (06 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

*(பதிப்புரிமையுடையது)*